DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 69/2024

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.9

Accused absent. Petition filed and allowed.

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சபரிகிரி வாசன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 08th day of June, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது இராஜபாளையம் தென்றல் நகரில் வசித்து வருகிறேன். நான் தென்றல் டிவி சர்வீஸ் பார்க்கும் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். சம்பவம் நடந்த தேதி எனக்குத் தெரியாது. சம்பவத்தின்போது நான் கடையை திறக்கவில்லை. எப்போதாவது தான் கடையை திறப்பேன். என்னை காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். 2, 3 தினங்களுக்கு முன்பு எனது கடையின் அருகில் ஒருவரின் தலையின் மீது கண்ணாடியை போட்டு உடைத்துவிட்டதாக சொன்னார்கள். இது சம்பந்தமாக எனக்கு யாரையும் தெரியுமா என்று கேட்டார்கள். நான் தெரியாது என்று சொன்னேன். இந்த விசயம் சம்பந்தமாக வேறு யாரும் என்னிடம் தகவல் சொல்லவில்லை. யார் யாரை அடித்தார்கள் என்றும் வழக்கில் இறந்துபோனவர்கள் விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

போலீஸார் விசாரித்தார்கள் என்றாலும், போலீஸ் விசாரணையில் 23.7.2023ம் தேதி நான் காலையில் கடையை திறக்கசென்றபோது அதற்கு முந்தைய நாள் இரவு 10.15 மணிக்கு எங்கள் கடை அருகில் உள்ள டீக்கடையில் வைத்து வழக்கில் இறந்துபோன ராயப்பன் என்பவரும் எதிரி கார்த்தீஸ்வரனும் மது அருந்திக்கொண்டிருந்ததாகவும், அப்போது ராயப்பன் கார்த்தீஸ்வரனை பார்த்து இன்னமும் உனக்கு நான் செலவு செய்து சரக்கு வாங்கிக்கொடுக்கிறேன். இனிமேல் வாங்கிக்கொடுக்கமாட்டேன் என்று சொன்னதாகவும், அதற்கு கார்த்தீஸ்வரன் அசிங்கமாக பேசி தினமும் நீதானடா கொடுப்பாய் இப்போது மாட்டேன் என்று சொல்கிறாய் என்று கூறி என் டிவிக்கடைக்கு வெளியில் வைத்திருந்த பிக்சர் டியூபை எடுத்து இத்தோடு தொலைந்து போடா என்று கூறி ராயப்பனின் தலையிலும் முகத்திலும் மாறி மாறி போட்டு கொலை செய்ததாக என்னிடம் டீக்கடைக்காரர் சொன்னார் என்றும், அதனை நான் போலிசாரிடம் சொன்னேன் என்றும் கூறிவிட்டு தற்போது உயிருக்கு பயந்து மேற்படி விபரங்களை சொல்லாமல் மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை – இல்லை.</u>

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.